REPORTING SECTION

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1979 ஏப்ரல் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) ஒழுங்குப் பிரச்னைகள்.

(அ) மைய அரசு, திரு. ஆசைத்தம்பியின் உடலைக் கொண்டுவர தனி விமானம் தருவது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்ச நேரம் உட்காருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : காலஞ் சென்ற பாராளுமன் உறுப்பினர் திரு. ஆசைத்தம்பியின் உடலைக் கொண்டு வர மத்திய அரசு விமானம் கொடுக்கவில்லை. எனவே, நாம் மத்திய அரசு மேல் கண்டனத் தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் எழுப்பிய பிரச்னையின்மேல் இரண்டொரு கருத்துக்களைச் சொல்லி நான் எனது உரையை முடிக்க விரும்புகிறேன். மதிப்பிற்குரிய — காலஞ்சென்ற — ஆசைத்தம்பி அவர்கள் இயற்கை எய்திய செய்தியைப் பற்றி நேற்றைக்குக் காலை 5-45 மணிக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் என்னோடு தொலைபேசியிலே தொடர்பு கொண்டு அந்தமானிலே இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி—துயர நிகழ்ச்சி நிகழ்ந்துவிட்டது என்றும் அவரது உடலை தாயகத் திற்குக் கொண்டு வருவதற்கு விமானத்திற்கு ஏதாவது ஏற்பாடு செய்வதற்கு முயற்சிக்க வேண்டுமென்றும் டெல்லியில் மாறன் அவர்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் எனக்குச் சொன்னார்கள். உடனடியாக இங்கேயிருக்கிற நமது மேஜர் ஜெனரல் மகாதேவன் அவர்களைத் தொலை பேசியிலே தொடர்பு கொண்டு அதற்கு ஏதாவது மார்க்கம் இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டபொழுது இரண்டு பேர் அந்தக் காரியத்தைச் செய்ய முடியும். ஒன்று, பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்கள் ; மற்றொன்று, பிரதம அமைச்சர் என்றார். உடனடியாக நமது முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு இந்தச் செய்தியைச் சொன்னவுடன்,

நீங்கள் உடனடியாக பாபுஜியோடு தொடர்புகொண்டு அதற்கான ஏற்பாட்டினைச் செய்வதற்கு முயற்சி எடுங்கள் என்று கேட்டார்கள். நான் உடனடியாக, ஜெகஜீவன்ராம் அவா களோடு தொடர்பு கொண்டேன். அவர்கள் எனக்குச் சொன்னது இதுவரை அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்ததில்லை என்றும் காலஞ்சென்ற அவர்களுக்காக, அவர்கள் நாடாளுமன்ற உறுப் பினர்களானாலும் சரி, அவர்கள் மற்றவர்களானாலும் சரி, அந்த விமானங்கள் பயன்படுத்தவில்லையென்றும், விதிகள் இடம் தரவில்லையென்றும் அதை மட்டுமல்ல, உங்களது கோரிக்கையைப் பற்றி நான் பரிசீலித்து முடிவு கூறுவதற்கு இங்கே பிரதம அமைச்சர் ஊரிலே இல்லை என்றும் எனக்குத் தெரிவித்து, 'கமர்ஷியல் பிளேன்ஸ்' என்றால், ஏதாவது ஏற்பாடு செய்ய முடிந்தால் பார்க்கிறேன் என்று எனக்கு செய்தி தெரிவித்தார். நான் அதை கலைஞருக்கும் சொன்னேன்.

அதற்குப் பிறகு அந்தமானிலேயிருந்து 'சீஃப் கமிஷனர்' அவர்கள் அனுப்பிய தந்தி முதலமைச்சருக்கும் நமது தலைமைச் செயலருக்கும் அனுப்பிய தந்தி, ஆசைத்தம்பி அவர்களின் உடல் பெரும் அளவிற்குப் பாதுகாக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்தாலும் அதுவும் சில மணி நேரங்கள்தான் வைக்கப்பட முடியும். அதற்குள்ளாக ஏதாவது விமானம் கிடைத்தால் அதிலே ஏற்றி அனுப்புவதற்கு மார்க்கம் இருக்கும் என்றும் டெல்லியோடு தொடர்பு கொள்ள முடியவில்லை யென்றும், ஏனென்றால் தொலைபேசி ஒழுங்காக வேலை செய்ய வில்லையென்றும், எனவே சென்னையிலேயிருந்து நீங்கள் மீண்டும் தொடர்புகொண்டு விமானம் அனுப்ப ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டார். அந்த முயற்சியிலேயும் தோல்வி அடைந்த பிறகு, நமது தலைமைச் செயலகத்திலேயிருந்து அந்தமானிலேயிருக்கிற சீஃப் கமிஷனருக்கு டெலக்ஸ் அனுப்பி அந்த உடலை 10-ந் தேதி வரை பாதுகாப்பாக வைக்க 'எம்பாம்' செய்யவேண்டுமென்றும், அன்றைக்குக் கிளம்புகிற விமானத்திலே உடலை அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள் என்று கலைஞர் அவர்கள் சொன்னதை நான் தலைமைச் செயலருக்குச் சொல்லி அந்த ஏற்பாட்டிற்கு வழிவகை செய்யப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சர் இப்படிப்பட்ட விதியை மாற்றுவதற் கில்லை என்று சொன்னதற்கு பிறகு, அதுவும் பிரதம அமைச்சர் ஊரிலே இல்லை. ஆகவே அவராக தன்னிச்சையாக அதைச் செய்ய முடியாது என்று கூறியதற்குப் பிறகு அதை ஏற்றுக் கொள்வது தான் சரி. அவர்கள் அந்த விதியைத் தளர்த்தி யிருக்கலாம் என்பது வேறு விஷயம். அப்படி விதியைத் தளர்த்தி அந்த உடலைக் கொண்டு வருவதற்கு உதவியாக அவர்கள் இருந்திருப்பார்களேயானால், அது ஒரு மனிதாபிமான செயலாகக் கூட கருதப்பட முடியும். ஆனால், அவர்கள் பாதுகாப்பு அமைச்சர் சொன்னது—விதிகள், அதாவது மிலிடரி ரூல்கள்,

உங்களுக்குத் தெரியும்: அது அவ்வளவு சுலபமாக தளர்த்தப்படக் கூடியது அல்ல. அப்படி இருக்கும்போது அவர் அந்த விதியைச் சொல்லி, பிரதம அமைச்சர் ஊரிலே இல்லை என்றும் சொல்லி அந்தத் துறையிலே தன்னால் எதுவும் இயலாது என்று அவர் தெரிவித்த பிறகு ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து மத்திய சர்க்காருக்கு எதிராக இங்கே நிறைவேற்றவேண்டும் என்று அம்பிகாபதி அவர்கள் கேட்டுக் கொள்வது நியாயமாக இருக்காது என்று நான் கருதுகிறேன். துயரமான நிகழ்ச்சி தான் என்றாலும் அந்த நேரத்தில் அவர்கள் உதவியிருக்கக்கூடும், உதவியிருக்க வேண்டும் என்ற எனது அபிப்பிராயத்தை இங்கே தெரிவித்துக் கொண்டு, கேட்டதைச் செய்யவில்லை என்ற காரணத்தினாலே கண்டிக்கப்பட வேண்டிய நிலைமையில் மத்திய சர்க்காரை இங்கே கொண்டுவந்து நிறுத்துவது இந்த அவைக்கு ஏற்ற தில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற் தீர்மானத்தை கொண்டு வந்து இந்த அவையில் வருத்தம் தெரிவிப்பதற்கு முன்னால் பிரச்னைகள் கொண்டு வருவதை அனுமதிப்பதற் கில்லை......

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நான் பிரச்னையை எழுப்பவில்லை. நமது அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய அறிக்கையில் இருக்கிற பலவீனமான கருத்து ஒன்றை நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பாராளு மன்றத்தில் ஒரு உறுப்பினர் அவருடைய பணிக்காலத்தில் அவருடைய ஊரை விட்டு, வீட்டை விட்டு, டெல்லியிலோ அல்லது வேறு இடத்திலோ, அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிற சமயத்தில் அவர் மறைந்து விட்டார் என்றால் அவருடைய சடலத்தை மத்திய சர்க்கார் தங்களுடைய பொறுப்பிலேயே, செலவிலேயே அவருடைய ஊருக்கு, அவருடைய வீட்டிற்கு கொண்டு வந்து சேர்ப்பிக்க வேண்டும் என்ற நிலைபாடு ஏற்கனவே இருக்கிறது. அதை எப்படி மாற்றினார்கள் என்று எனக்குப் புரியவில்லை. விமானம் கிடைக்கவில்லை என்று சொல்வதை நம்ப முடியவில்லை. தனியாக ஒரு சார்ட்டர் பிளேன்—விமானத்தை வைத்துக் கொண்டு வந்திருக்கலாம். அது ஒன்றும் மத்திய சர்க்காருக்கு பிரமாதமான காரியம் அல்ல. கொஞ்சம் பணம் செலவழியும். அதுவும் அவர்களுக்குப் பெரிய விஷயம் அல்ல. இப்படிப்பட்ட நிலைமையில் செய்ய வேண்டிய கடமையை மத்திய சர்க்கார் செய்யாமல் போயிருக் கிறார்கள் என்பது பற்றி இந்த அவையினுடைய மனவருத்தத்தை யாவது தெரிவிக்க வேண்டாமா என்று தான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் குறிப்பிடுவது நியாயமான உணர்வு என்பதை நான் மறுக்கவில்லை. கமர்சியல் பிளேன் அனுப்பி அவர்கள் உடலைக் கொண்டு வந்திருக்க முடியும். அதற்கு மற்ற ஆவ்ரோ பிளேன்கள் எல்லாம் போவதற்கில்லை. போக வேண்டிய விமானம் போயிங் ஒன்றுதான். அந்த விமானம் நேற்றைக்குத்தான் செல்ல முடியும். நேற்றைக்கு அல்ல, இன்றைக்கு. ஏனென்றால் விமான சர்வீஸ் இரண்டு முறை தான் இருக்கிறது. அதுவும் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பிறகுதான் நாளைக்கு 10-ம் தேதி புறப்படுகிற விமானத்தில் அவருடைய உடலை இங்கே கொண்டு வருவது என்ற தீர்மானத்தை இங்கே சொன்னேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே......

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். இரங்கல் தீர்மானத்தைப் படித்து முடித்து விடுகிறேன்.

(2) இரங்கல்குறிப்பு—முன்னாள் உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் 7-4-1979 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி 1957ஆம் ஆண்டிலிருந்து 1962ம் ஆண்டு வரை சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்தும், 1967ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டு வரை சென்னை எழும்பூர் தொகுதியிலிருந்தும் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1977ஆம் ஆண்டு வடசென்னை பாராளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு, பாராளுமன்ற மக்கள் அவையில் தற்போது உறுப்பின ராக பணியாற்றி வந்தார்.

அன்னார் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.